எம்.சி.ஓ.பி எண்: 876 /2022 தேதி: 01.12.2025

மசா. : 1

பெயர் : சந்தான லட்சுமி

க /பெ. : மணி

வயது : 55

<u>**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**</u>

<u>**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. யாருடைய கவனக்குறைவால் விபத்து நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. புகார் நான் கொடுக்கவில்லை. என் மகன்தான் என் கணவரை மருத்துவமனையில் சேரத்தார் என்றால் சரி. என் கணவரின் ஆதார்கார்ட் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என் கணவரின் வேலை சம்பந்தமான அடையாள அட்டை மசாஆ 12ல் அவரது பிறந்த தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என் கணவர் விபத்து சமயத்தில் ரூபாய் 10,164/- சம்பளம் வாங்கினார் என மசாஆ 13 ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது. அந்த தொகையை வங்கி கணக்கில் செலுத்துவார்கள். என் கணவரின் வங்கி கணக்கு விவரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என் பிள்ளைகள் திருமணம் ஆகி தற்பொழுது தனித்தனியாக வசிக்கிறார்கள். விபத்து சமயத்தில் 3,4 மனுதாரர்களுக்கு திருமணம் ஆகவில்லை. என் கணவரின் வருமானத்தை எனது பிள்ளைகள் சார்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய மகன், மற்றும் என் மருமகன்கள் வேலை பார்க்கிறார்கள். நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய கணவரின் அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

X

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.